# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● அக்டோபர் 2, 2021 Weekly E-paper ● October 2, 2021




# ‘இந்து’வில் என்ன தமிழ் இந்து, ஆரிய இந்து?

● சுப. வீரபாண்டியன்

## இந்தியப் பொருளாதாரம்

பேராசிரியர் வெ.சிவப்பிரகாசம்

## ஒற்றுமையில் வேற்றுமையா!

தலையங்கம்

## தளபதியின் ஆட்சியில் தலைநிமிரும் பெண்கள்

சேலம் அப்பாவு புவனேஸ்வரி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2052 ● அக்டோபர் 2, 2021 Weekly E-paper ● October 2, 2021


# ‘இந்து’வில் என்ன தமிழ் இந்து, ஆரிய இந்து?

● சுப. வீரபாண்டியன்

தங்களைத் தமிழ் இந்துக்கள் என்று அறிவித்துக் கொள்ள இன்று சிலர் முடிவெடுத்துள்ளனர். அது அவர்கள் விருப்பமும், உரிமையும் சார்ந்தது. ஆனால் அப்படி அறிவித்துக் கொள்வதற்கு முன், “திராவிடம் என்ற சொல் சங்க இலக்கியத்தில் இருக்கிறதா?” என்று கேட்ட அவர்கள், இந்து என்ற சொல் சங்க இலக்கியத்தில் எத்தனை இடங்களில் இருக்கிறது என்று சொன்னால் பயனுள்ளதாக இருக்கும்.

கிருத்துவர்களும், இஸ்லாமியர்களும் தங்களுக்குள் ஒருங்கிணைப்புப் பணிகளை செய்து கொண்டிருக்கிறார்களாம். எனவே சைவர்கள், வைணவர்கள் எல்லோரும் இந்துக்கள், அதாவது தமிழ் இந்துக்கள் என்ற பெயரில் இணைய வேண்டுமாம். எனவே இந்த ஒற்றுமை முயற்சி, கிறித்துவ, இஸ்லாமியர்களுக்கு எதிரானது போலிருக்கிறது. அதைத்தான் ஆர்.எஸ்.எஸ்., பாஜக ஆகியனவும் முன்வைக்கின்றன.

இருவரின் நோக்கமும், மத அடிப்படையில் இந்துக்களை இணைப்பதும், திராவிடத்தை எதிர்ப்பதும்தான். ஆனால் இருவரும் ஒன்று என்று நாம் நினைத்துவிடக் கூடாதாம். இவர்கள் தமிழ் இந்துக்களாம், அவர்கள் ஆரிய இந்துக்களாம். இருவரும் செய்யும் வேலை மட்டும் ஒன்றுதானாம்!

திராவிட நாடு எங்கே இருக்கிறது என்று கேட்கும் இவர்கள், ஆரிய நாடு எங்கே இருக்கிறது என்பதை இன்றுவரையில் தெரிவிக்கவில்லை.

திராவிடம் என்ற பெயர் ஒரு நூற்றாண்டுக்கு முன் வந்தது என்பதால் அதனை ஏற்கக் கூடாதாம். ஆனால் ஓரிரு நூற்றாண்டுக்கு முன் ஆங்கிலேயரால் சூட்டப்பட்ட இந்து என்ற பெயரை ஏற்றுக்கொள்ள வேண்டுமாம்.

ஆங்கிலேயர்கள் இந்து என்றும், இந்தியா என்றும் பெயர் சூட்டினார்கள் என்று சந்திரசேகர சாமிகள் சொல்லியுள்ளார். எனவே ஆங்கிலேயர் உருவாக்கிய இந்தியாவை நாம் ஏற்றிடக் கூடாது என்றும், இந்துவை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் ‘தத்துவப் பேராசான்கள்’ நமக்குக் கற்றுக் கொடுக்கின்றனர்.

இன்னொரு பெரிய அதிசயத்தையும் பேராசான் கண்டுபிடித்திருக்கிறார். ‘இந்து’ என்பது மதச் சார்பற்ற பெயராம். எனவே ஜெய் ஸ்ரீராம் என்று சொல்வதை எதிர்க்கும் அவர், விநாயகர் அகவல் பாட வேண்டும் என்கிறார். ஓ..விநாயகர் மதச் சார்பற்றவர் போலிருக்கிறது!

தமிழ் இந்துக்கள் வருணாசிரமத்தை



எதிர்க்கின்றனராம். ஆனால், மறந்தும் பார்ப்பனர் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், ‘பிராமணர்’ என்னும் வருணாசிரமச் சொல்லைத்தான் பயன்படுத்துவார்களாம்.

பகுத்தறிவு என்பதெல்லாம், சிந்தனைக் குறைவானவர்களின் பேச்சாம் - இது குட்டி ஆசானின் அருள்மொழி! தெய்வத்தின் குரலை ஒட்டி, இப்போது பேராசான், சிற்றாசன் குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன.

இந்தப் பட்டங்களை எல்லாம் அவர்கள் விரும்பவில்லையாம். பட்டங்கள் போட்டுக்கொள்ளும் திராவிட மரபைப் பார்த்துத் தமிழ்த் தேசியத் தம்பிகள் சிலர் இப்படிப் போடுகிறார்களாம். ஆகமொத்தம், திராவிட இயக்க மரபைத்தான் அங்கிருப்பவர்களும் பின்பற்றுகின்றனர் என்பது புரிகிறது.

சைவம், வைணவம் இரண்டு மதங்களும் நெருக்கமாக வந்து விட்டன என்பதால், இரண்டையும் சேர்த்து, இந்து - மன்னிக்கவும் - தமிழ் இந்து என்கின்றனராம். ஏன், காணபத்யம், கௌமாரம், சாக்தம், சௌரம் போன்றவைகளைச் சேர்க்கவில்லை? அவற்றையும் சேர்த்தால் அது ‘கருவாட்டுச் சாம்பார்’ ஆகிவிடுமோ?

எல்லாம் முடிந்துவிட்டது. மேலாடையைக் கழற்றிவிட்டு, திருச்செந்தூர் முருகன் அருள் பெற மாலையும், கழுத்துமாய் நின்றாயிற்று. அவாளாகவே மாறிவிட்டார்கள். பூணூல் ஒன்றே ஒன்றுதான் பாக்கியுள்ளது. அதையும் போட்டுக்கொள்ள இவர்கள் தயார். ஆனால் அவரகள் அனுமதிக்க மாட்டார்கள்! ●

ஈரோடு மாவட்டம் குருவரெட்டியூரில்

**“சமூகநீதி நாள்” விழா**

**10.10.21 ஞாயிறு மாலை 6.00 மணி**

சிறப்புரை

**மானமிகு சுப.வீரபாண்டியன் ,**
பொதுச் செயலாளர் திராவிடர் இயக்க தமிழர் பேரவை.

தலைமை

**மானமிகு ப.பிரகலாதன்,** திராவிடர் கழகம்

முன்னிலை

**மாண்புமிகு அந்தியூர் ப.செல்வராஜ்,**
திமு கழக துணைப் பொதுச் செயலாளர்

**ஜி. வெங்கடாசலம்,** அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர்

விழா ஏற்பாடு:

திராவிடர் கழகம் மற்றும் திராவிடர் விடுதலை கழகம்.

# இந்தியப் பொருளாதாரம்
## இந்தியர்கள் கட்டுப்பாட்டில் இல்லை!

● பேராசிரியர் முனைவர் வெ.சிவப்பிரகாசம்


முனைவர் வெ.சிவப்பிரகாசம்

சங்பரிவார பத்திரிகைகளுள் ஒன்றான பஞ்சன்யாவில், அமேசான் நிறுவனத்தை, ‘கிழக்கிந்தியக் கம்பெனி 2.0’ என்று விமர்சித்து எழுதியிருக்கிறார்கள். இது நம்மை முட்டாள்கள் ஆக்குவதற்கானச் செயலாகும். இவர்கள் யாரையும் எப்போதும் எதிர்த்தது கிடையாது. பாபர் வந்த போதிலிருந்து அவர்களோடு சேர்ந்து அமைச்சர் பதவிகளை வாங்கிக் கொண்டு வாழ்ந்த கும்பல் இவர்கள். 1942இல் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பலரும் சிறைக்குச் சென்றார்கள். ஆனால் ஆர்எஸ்எஸ் காரர்கள் கலந்து கொள்ளவில்லை. ராஜாஜி கலந்துகொள்ளவில்லை. இவர்கள்தான் தேசப்பற்று பற்றி பேசுகிறார்கள். மற்றவர்களை ஆன்ட்டி இந்தியன் என்று சொல்கிறார்கள். அதேபோல் மன்னிப்புக் கடிதம் கொடுத்துவிட்டு வந்த (வீர)சாவர்க்கர் பற்றியெல்லாம் நாம் படித்திருக்கிறோம். சூத்திரர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் உண்மை வரலாறு சரியாகத்தெரியாததாலும், அவர்கள் வறுமையில் வாடுவதாலும், அறியாமையில் இருப்பதாலும் இவர்கள் இப்படிப்பட்டப் பொய்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

1991 லிருந்து NEP, புதிய பொருளாதாரக் கொள்கை கொண்டுவரப்பட்டது. New Economic Policy என்றால் New Colonization Policy தான். இவர்கள் அனைத்தையும் தனியாரிடம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் இது தேசியத் தன்னிறைவிற்கு எதிரானது. 2008 இல் உலகெங்கும் பொருளாதார மந்த நிலை ஏற்பட்ட போது இந்தியாவில் நாம் தப்பித்துக் கொண்டோம். ஏனெனில் வேளாண் துறையில் அந்நிய முதலீடு கிடையாது. சீனாவில், வெளிநாட்டு முதலீடு வருகிறதென்றால், இவ்வளவு காலம், இவ்வளவு இலாபம்தான் ஈட்டிக்கொள்ளவேண்டும், தொழில்நுட்பத்தை இங்கு கற்றுக் கொடுத்திருக்க வேண்டும், பணியாளர்களுக்கு உத்தரவாதம் கொடுக்கப்பட வேண்டும் என்பன போன்ற விதிமுறைகள் இருக்கின்றன. உலகமயமாதல், தனியார்மயமாதல், தாராளமயமாதல் என எல்லாவற்றையும் திறந்துவிட்டு இன்று அமேசான் நிறுவனத்தைக் கிழக்கிந்தியக் கம்பெனி என்று சொல்வதற்கு இவர்களுக்கு எந்த அருகதையும் கிடையாது.

இந்தியாவில் என்ன செய்கிறார்கள்? அனைத்தையும் அம்பானி அதானிக்குக் கொடுத்துவிடுகிறார்கள். ரஃபேல் உற்பத்திக்கான வாய்ப்பை ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல் லிமிடெட்க்கு கொடுக்கவில்லையே. அம்பானிக்குத்தான் கொடுத்தார்கள். இங்கே அமேசான் போன்ற நிறுவனங்களை எதிர்ப்பது ஆனால் அமெரிக்காவோடு கூட்டணியில் இருப்பது. டிரம்புக்கு ஆதரவாக தேர்தலில் இவர்கள் செயல்பட்டதை எல்லாம் நாம் பார்த்தோம். இப்போது இப்படிப் பேசுவதெல்லாம் வெறும் வாக்கு வங்கிக்காக, தேர்தலுக்காக, அப்பாவிச் சூத்திரர்களையும் பஞ்சமர்களையும் ஏமாற்றுவதற்காகச் சொல்வது. வேலையில்லாத் திண்டாட்டம் எப்போதும் இருக்க வேண்டும், வறுமை எப்போதும் இருக்க வேண்டும் அப்போதுதான் கர்மா என்று சொல்லி மதத்தையும் சாதியத்தையும் முதலாளித்துவத்தையும் நிலைநிறுத்த முடியும்.



யூடியூப், ஃபேஸ்பக் போன்ற சமூக ஊடகங்கள் வந்ததெல்லாம் சிந்தனைப் புரட்சியாகும். இன்று யார் எது பேசினாலும் உடனடியாக அது மக்களிடம் சென்றடைந்த விடுகிறது. இவர்கள் சொன்னால்தான், இவர்கள் பத்திரிகைகளைப் படித்தால்தான் செய்திகளைத் தெரிந்துகொள்ள முடியும் என்ற காலம் எல்லாம் போய்விட்டது. அறிஞர் அண்ணா சொன்னது போல இது சாமானியர்களின் காலமாகும். இங்குள்ள இந்துத்துவ முதலாளிகளுக்கும் அமெரிக்க முதலாளிகளுக்கும் போட்டி நடக்கும்போது இப்படிப் பேசி அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தித் தங்களுக்குத் தனிப்பட்ட முறையில் ஒத்து வராதவர்களை எதிர்ப்பார்கள்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்பாக பெங்களூரில் கேஎஃப்சி தொடங்கப்பட்ட போது அதை எதிர்த்துப் பெரிய போராட்டம் நடத்தப்பட்டது. ஆனால் இன்று கேஎஃப்சி, மெக் டொனல்ட்ஸ் போன்றவை அனைத்துப் பகுதிகளிலும் நிரம்பியிருக்கின்றன. அவர்கள் எப்போதோ இங்கு வந்து விட்டார்கள். இந்தியப் பொருளாதாரம் இவர்கள் சொல்வதைப்போல சுதேசிப் பொருளாதாரமாக இருக்கிறதா அல்லது விதேசிப் பொருளாதாரமாக இருக்கிறதா? இந்தியப் பொருளாதாரம் இந்தியர்களுடையக் கட்டுப்பாட்டில் இல்லை. உலக வங்கியில் கடன் வாங்கவேண்டும். பொருளாதாரத்தில் பெரிய அளவில் பற்றாக்குறை இருக்கிறது. இவர்களுடைய பொருளாதாரத் தத்துவமே இவர்களுடையது இல்லை. நியூ எக்கனாமிக் பாலிசி எல்லாம் ஆங்கிலேயர்கள் சொன்னதுதான். இன்னும் சொல்லப்போனால் கிழக்கிந்தியக் கம்பெனி காலத்திலாவது பொதுத்துறையில் ரயில்வே அஞ்சல் துறை போன்றவற்றை வைத்திருந்தார்கள். பொதுக்கல்வியை அவர்கள்தான் கொடுத்தார்கள். ஆனால் இவர்கள் எல்லாவற்றையும் தனியார் துறைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுத்துறையை ஒழித்துவிட்டு இவர்கள் எப்படிக் கிழக்கிந்தியக் கம்பெனி மீண்டும் இந்தியாவிற்குள் வருகிறது என்று சொல்ல முடியும்? நன்கு படித்த பொருளாதார அறிஞர்களிடம் இவர்கள் பேச முடியாது. அவர்கள் பேசுவதெல்லாம் அப்பாவி மக்களிடம்தான். இப்போது ஆளுகிறவர்களே கிழக்கிந்தியக் கம்பெனி போன்றவர்கள்தான். ஏழை மக்களுக்கான உழைக்கும் மக்களுக்கான ஆட்சி நூற்றுக்கு நூறு கிடையாது.

அமெரிக்காவும் சரி ஜெர்மனியும் சரி ஜப்பானும் சரி அவர்களுடைய தேசிய நலனைக் கவனத்தில் கொண்டு செயல்படுகிறார்கள். ஆனால் இந்தியாவில் இவர்களுடையத் தனி நலனைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது pro-brahmins, pro-rich என்று கவனமாகச் செயல்பட்டு வருகிறார்கள். மக்களுடையப் பொருளாதார நிலையில் சமூக நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லை. ●

# H.ராஜா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

பா.ஜ.கவைச் சேர்ந்த ஹரிஹர ராஜா சர்மா என்ற பெயருக்குரிய H.ராஜா என்பவர் நாகரீகமற்றுத் தரம்தாழ்ந்துப் பேசக்கூடியவருள் குறிக்கத் தக்க ஒருவர் என்பது அவரின் குண இயல்பைக் காட்டுகிறது. இந்தக் காரணங்களால் இவர் சமூக ஊடகங்களின் கண்டனங்களுக்குத் தொடர்ந்து ஆளாகி வருபவர்.

அண்மையில் நயத்தக்க நாகரீகத்தின் உள்ளடக்கப் பண்பாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களை, நாகூசும் சொற்களால் அசிங்கமாக அவதூறு பேசியிருக்கிறார் இந்த ஹரிஹர ராஜா சர்மா என்ற H. ராஜா. அத்துடன் பத்திரிகையாளர்களை "பிரஸ்ட்டிடியூட்ஸ்" (வேசித்தனம்) என்று கேவலமாகப் பேசியிருக்கிறார். தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள் "கருஞ்சட்டைத் தமிழர்" மின்னிதழ் ஆசிரியர் என்பது கவனிக்கத்தக்கது.

எனவே கடந்த 29-09-2021 அன்று சென்னைக் காவல் ஆணையரிடத்தில் H.ராஜாவின் அருவருப்பானப் பேச்சினால் இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 499 மற்றும் 505 உள்ளிட்டப் பிரிவுகளின் கீழ் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி புகார் அளித்து மனு கொடுத்துள்ளார், தோழர் சுப.வீரபாண்டியன் அவர்கள். காவல் ஆணையம் விரைவில் H. ராஜா மீது நடவடிக்கை எடுக்கும் என்பது மக்களின் எதிர்பார்ப்பாகும். ●



## வீரபாண்டி ஆ.இராசா மறைந்தார்



திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த முன்னாள் அமைச்சர் சேலம் வீரபாண்டியாரின் இளைய மகனும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், தி.மு.கழகத் தேர்தல் பணிக்குழுச் செயலாளருமான வீரபான்டி ஆ. இராஜா இன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி அதிர்ச்சியாக இருந்தது.

அவரின் பிறந்த நாளான ( 2 - 10 - 2021) இன்று, அவரின் தந்தைக்கு மாலையணிவித்த நிலையில் மாரடைப்பு ஏற்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியில் காலமானார். இவரின் இழப்புக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவை சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**-சுப.வீரபாண்டியன்**
பொதுச் செயலாளர்

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஒற்றுமையில் வேற்றுமையா !

இந்திய ஒன்றியத்தில் வெவ்வேறு மொழிகள் பேசும் மக்கள், வெவ்வேறு பண்பாடுகளைக் கொண்ட மக்கள் இணைந்து வாழ்கிறார்கள். இதைப் பன்மையில் ஒற்றுமை என்று கூறலாம். இதைப் பா.ஜ.க அரசு விரும்பவில்லை.

பா.ஜ.க வின் நட்டா, சமஸ்கிருதமே பழைமையான மொழி. அங்கிருந்துதான் வரலாறு தொடங்க வேண்டும் என்கிறார். கீழடி உள்ளிட்டத் தமிழக ஆய்வுக் களம் அவரை உலுக்கி விட்டது.

ஒன்றிய அமைச்சர் அமித்ஷா நாட்டு மக்கள் இந்தியில் பேச வேண்டும் என்கிறார்.

அண்மையில் இரயில்வே பணித் தேர்வில் உத்தரப் பிரதேசம், கோரக்பூரில் இந்தியில் தேர்வு எழுதிய வட நாட்டவர்கள் தெற்கு இரயில்வேயின் தமிழ்நாட்டில் பணிக்கு அமர்த்தப் பட்டிருக்கிறார்கள். அதே சமயம் தமிழ்நாட்டில் தேர்ச்சி பெற்றவர்களைக் காத்திருப்போர் பட்டியலில் வைத்துள்ளது இரயில்வே நிர்வாகம்.

ஒரு கண்ணில் வெண்ணெய்யும், ஒரு கண்ணில் சுண்ணாம்பும் வைப்பது போல இருக்கிறது இந்தச் செயல்.

நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன் ஒன்றிய,துறை அமைச்சரின் கவனத்திற்கு இதைக் கொண்டு சென்றுள்ளார். இது போன்ற போக்குகளை ஒன்றிய அரசிடம் தொடர்ந்து பார்க்க முடிகிறது.

ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு, பக்ரித் "அவர்கள் " பண்டிகை, விநாயகர் "நமது " பண்டிகை என்று பள்ளிப் பாடங்களில் சொல்வதன் மூலம் மக்களின் ஒற்றுமை, நாட்டின் ஒற்றுமை என்பதில் அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு என்று சொல்வது பன்மைத்துவத்திற்கு எதிரானது. இது ஆர்.எஸ்.எஸ் இன் "ஏக இந்தியா" என்ற இலக்கை நோக்கி வலிந்து நகர்த்துவதாகத் தெரிகிறது.

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

என்ற இத் திருக்குறளை மோடிக்கு யாராவது எடுத்துச் சொன்னால், நன்று !

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408**

# தளபதியின் ஆட்சியில் தலைநிமிரும் பெண்கள்

● சேலம் அப்பாவு புவனேஸ்வரி



கலைஞர் வழி வந்த திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தமிழக முதலமைசராகப் பொறுப்பேற்றவுடன் சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை என்றப் பெயரை “சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை” எனப் பெயர் மாற்றம் செய்தார். இதன் மூலம் முதலமைச்சர் அவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் பாதுகாப்பின் மீது அக்கரை கொண்டு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்.

முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அன்றே அரசுப் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லாமலே பயணிக்கிலாம் என்று கோப்பில் கையொப்பமிட்டார். பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் கடந்த ஆட்சியில் 18 வயது பூர்த்தியடைந்த பெண்களுக்கு முதிர்வுத் தொகை வழங்கப்படாமல் இருந்தது. முதிர்வுத் தொகை வழங்கப்பட வேண்டிய பெண்களின் பட்டியல் சேகரிக்கப்பட்டு, 73 ஆயிரம் பெண்களுக்கு முதிர்வுத் தொகை வழங்கப்படாமல் இருந்தது. அடையாளம் கண்டு மாநில அளவில் மாவட்ட அளவில் பெற்றோர்களுக்கு 28 ஆயிரத்து 950 ருபாய், பெண்களுக்கு தோராயமாக 60 கோடி ரூபாய் முதிர்வுத் தொகையாக வழங்கப் பட்டுள்ளது.

மக்கள் தொகையில் சரி பாதி உள்ள பெண்கள் பாதுகாப்பற்றச் சூழலில் உள்ளனர்.

உதாரணத்திற்கு, 2013 ஆம் ஆண்டு 419 ஆக இருந்த பாலியல் குற்றங்கள், 2014-ல் 1,055 ஆக உயர்ந்துள்ளது. இது 2015-ல் 1,546 ஆகவும் 2016-ல் 1,585 ஆகவும் 2018-ல் 2,052 ஆகவும் 2019-ல் 2,410 ஆகவும் அதிகரித்து வருவது ஆர்டிஐ மூலம் தெரியவந்துள்ளது. வருடத்திற்கு வருடம் பாலியல் குற்றங்கள் அதிகரித்து வருகிறன.

விஷாகா குழுவின் முன்னோடி என்றால் அது பன்வாரி தேவி ஆவார். பன்வாரி தேவி ராஜஸ்தான் மாநிலத்தில், ஜெய்பூரிலிருந்து 55 கிலோமீட்டர் தொலைவிலுள்ள பத்தேரி என்ற கிராமத்தில் வசித்துவந்தார். இவர் கும்ஹார் (குயவர் - potter) என்ற சாதியை சேர்ந்தவர். இவர் ஒரு சமூக சேவகி. அதனால் ராஜஸ்தான் மாநில அரசால் பெண்கள் மேம்பாட்டுத் திட்டத்தில் பணியமர்த்தப்பட்டார்.

1992 ஆம் வருடம் குஜ்ஜார் சாதியில் (Gujjar) 9 வயது குழந்தைக்குத் திருமணம் செய்து வைக்க முயற்சி நடப்பதை அறிந்த பன்வாரி அக்கிராமத்திற்குச் சென்று அவர்களுக்குத் தக்க ஆலோசனை கூறினார். ஆனால் அவர்கள் கேட்பதாக இல்லை.

உயர்சாதியினரின் ஆதிக்கச் சக்தியை அறிந்த பன்வாரி “9 வயது பெண்ணுக்கு திருமணம் செய்கிறார்கள், அதைத் தடுப்பது என் பணி என போலீசுக்கு தகவல் தெரிவித்தார். அங்கு வந்த போலீசிடம், கிராமத்தினர் இது சாதாரண விழா, திருமணம் ஏதுமில்லை என நாடகம் நடத்தி அனுப்பிவிட்டனர்.

22, செப்டம்பர், 1992 அன்று அக்குழந்தையின் குடும்பத்தைச்சேர்ந்த 5 ஆண்கள் பன்வாரியை அடித்ததுடன், பன்வாரியை அவர் கணவர் முன்னிலையில் பாலியில் பலாத்காரம் செய்தனர். அப்போது அவருக்கு வயது 26. பன்வாரியும், அவரது கணவரும் இந்தப் பிரச்சினையை அப்படியே விட்டுவிடக் கூடாது என முடிவு செய்து நீதிமன்றத்தை அணுகினர். இவ்வழக்கு நடந்த 1995 வருடம் வரை 5 முறை நீதிபதிகளை மாற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும், குற்றவாளிகளைப் பின்வரும் காரணங்களை மேற்கோள் காட்டி நீதிபதி விடுவித்தார் :

ஒரு கிராமத் தலைவர் கற்பழிக்க முடியாது பல்வேறு சாதியைச் சேர்ந்த ஆண்கள் கும்பலாகக் கற்பழிப்பில் பங்கேற்க முடியாது.60-70 வயது முதியவர்கள் பாலியல் பலாத்காரம் செய்ய முடியாது.உறவினரின் முன்னால் ஒரு மனிதன் கற்பழிப்பதில்லை; போரி வழக்கில் (Bhori's case) குற்றம் சாட்டப்பட்டவர்களில் இரண்டு பேர் ஒரே குடும்பத்தினர் - மாமா மற்றும் மருமகன். உயர் ஜாதி உறுப்பினர், தூய்மைக்கான காரணங்கள் காரணமாக குறைந்த சாதி பெண்ணை கற்பழிக்க முடியாது.

அதன்பின், ஜெய்ப்பூர் மற்றும் டில்லியைச் சார்ந்த அரசு சாரா அமைப்புகளின் சார்பில் சமூக ஆர்வலர்கள் மற்றும் மகளிர் குழுக்கள் "விஷாகா" கூட்டுத் தளத்தின் கீழ் உச்சநீதிமன்றத்தில் ஒரு பொது நலன் மனு தாக்கல் செய்தனர். பணியிடங்களில் பெண்களைப் பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்றும், பெண்களின் பாதுகாப்புக்கு முதலாளிகள் பொறுப்பேற்க வேண்டும், குறிப்பாகப் பெண்களின் பாதுகாப்புக் குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர்கள் கோரினர்.

விஷாகா மற்றும் பலர் Vs ராஜஸ்தான் மாநிலம் வழக்கில் 13, ஆகஸ்ட்,1997 அன்று உச்சநீதிமன்றத் தீர்ப்பில் சில வழிமுறைகளை வகுத்தது. (AIR 1997 SUPREME COURT 3011)

உச்சநீதிமன்றம் வகுத்துள்ள விதிகள்...

1. இந்த விஷாகா கமிட்டியின் தலைவராக பெண் அதிகாரியை நியமனம் செய்ய வேண்டும்.

2. கமிட்டியில் மொத்த உறுப்பினர்களில், 50 சதவீதம் பெண்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும்.

3. ஒரு உறுப்பினர் நிறுவன ஊழியராக இல்லாமல், தன்னார்வுத் தொண்டு அமைப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

4. இந்தக் கமிட்டி ஆண்டுதோறும் அதன் செயல்பாடுகளைத் அறிக்கையாக தயாரித்து அரசிடம் வழங்க வேண்டும்.

பெண் ஊழியரைத் தொட்டுப் பேசுவது, அவரைப் பாலியலுக்கு அழைப்பது, அதிகாரத்தை வைத்து மிரட்டுவது, பாலியல் ரீதியான வார்த்தைகளைப் பேசுவது, ஆபாசமானப் படங்களைக் காட்டுவது உள்ளிட்டவை பாலியல் தொல்லைகளாக வரையறுக்கப் பட்டுள்ளன.

உச்ச நீதிமன்ற உத்தரவை மேற்கொண்டு பணியிடத்தில் பாலியல் துன்புறுத்தல் தடுப்புச் சட்டம் 2013 (the Sexual Harassment of Women at Workplace (Prevention, Prohibition and Redressal) Act, 2013) இயற்றப்பட்டு அதன் படி, அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணி புரியும் பெண்கள் சந்திக்கும் பாலியல் பிரச்சினைகள் பற்றி புகார் தெரிவிக்க விஷாகா கமிட்டி அமைக்கப்பட வேண்டும். பத்து ஊழியர்களுக்கு மேல் பணி புரியும் அனைத்து நிறுவனங்களிலும், அலுவலகங்களிலும் விசாகா கமிட்டி அமைக்கப்படுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

அரசுத் துறை, தனியார்த் துறை மட்டுமில்லாமல், பாதிக்கப்படும் தினக் கூலிப் பெண் பணியாளர்களும் புகார் தருவதற்கு வசதியாக, ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும், ‘விஷாகா’ குழு அமைக்க வேண்டும். ஆனால் இதுவரை அமைக்கப்படவில்லை.

பெண்களின் பாதுகாப்பில் அக்கரை காட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்கள், பெண்களுக்குப் பாதுகாப்பான சூழல் ஏற்படுத்திக் கொடுக்க விரைந்து, போர்கால அடிப்படையில் விஷாக கமிட்டி அமைத்துப் பெண்களின் அரணாக இருக்க வேண்டும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian